அ.வ.எண். 8/2015 நாள்: 05.03.2026

பி.சா.1 திரு. ராமதாஸ்

<u>சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1) வாதி என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்று தெரியுமா என்றால் தெரியும், எனது தகப்பனார் வாங்கிய சொத்தில் விற்றது போக மீதமுள்ள சொத்தில் பாகம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார். எனது முதல்விசாரணை வாக்குமூலம் நான் சொல்லி தயார் செய்யப்பட்டதா அல்லது எனது வழக்கறிஞர் தயார் செய்ததில் நான் கையொப்பம் செய்தேனா என்றால் நான சொல்லி எனது வழக்கறிஞர் தயார் செய்தார். எனது முதல்விசாரணை வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் அனைத்தும் எனக்கு தெரியும் என்றால் தெரியும். வழக்கு சொத்துக்கள் 4 இன சொத்துக்களில் வாதி மற்றும் 1 முதல் 7 பிரதிவாதிகளுக்கு பாகம் உள்ளது என்றால் 1, 2 மற்றும் 4 வது இன சொத்தில் மட்டும் பாகம் உள்ளது.

2) 3 வது இன சொத்து யார் பெயரில் உள்ளது என்றால் எனது பெயரில் உள்ளது, அதற்கு முன்பு எனது தாயார் பெயரில் இருந்தது. எனது தாயார் மேற்படி சொத்தை எப்போது கிரையம் வாங்கினார் என்றால் 1976–ல் வாங்கியதாக நினைக்கிறேன் சரியாக தேதி ஞாபகம் இல்லை. நான் என்ன படித்துள்ளேன் என்றால் பி.காம் படித்துள்ளேன். நான் அரசு உத்தியோகத்தில் இருந்துள்ளேனா என்றால் கருவூலத்துறையில் அதிகாரியாக இருந்து ஓய்வு பெற்றுள்ளேன். கருவூலத்துறையில் எந்த வருடம் பணியில் சேர்ந்தேன் என்றால் 23.06.1976–ல் பணியில் சேர்ந்து 30.11.2008–ல் பணி ஓய்வு பெற்றுள்ளேன். எனது தகப்பனார் என்ன வேலை செய்தார் என்றால் சுண்ணாம்பு கால்வாய் வைத்திருந்தார்.

3) எனது அம்மா எதாவது வேலை செய்தாரா என்றால் மாட்டு பண்ணை வைத்திருந்தார், வட்டிக்கு பணம் கொடுத்து வந்தார் மற்றும் அரிசி வியாபாரம் செய்திருந்தார். எனது தகப்பனார் எந்த வருடம் சுண்ணாம்பு கால்வாய் வைத்திருந்தார் என்றால் குலத்தொழில் என்பதால் இளமை காலம் முதல் மேற்படி சுண்ணாம்பு கால்வாய் பராமரித்து வந்தார். 1, 2, 4 இன சொத்துக்கள் எனது தாத்தா வாங்கியது என்றால் இல்லை, எனது தகப்பனாரால் வாங்கப்பட்டது. மேற்படி 1, 2, 4 இன சொத்துக்கள் எனது தகப்பனாரால் எந்த வருடம் வாங்கப்பட்டது என்றால் 1976–ல் 1ஆம் இன சொத்தும், 1986–ல் 2, 4 இன

சொத்துக்கள் வாங்கப்பட்டது. 1ஆம் இன சொத்து 1976–ல் யாரிடமிருந்து வாங்கப்பட்டதுஎன்றால் சந்திரசேகர் என்பவரிடமிருந்து வாங்கப்பட்டது. 2, 4 இன சொத்துக்கள் சொர்ணத்தம்மாள் என்பவரிடமிருந்து வாங்கப்பட்டது.

4) எனது தம்பி 2ஆம் பிரதிவாதி ஜோதிமணி அவரது மனைவி மாலதி என்பவருக்கு 11.01.2016 அன்று குடும்ப ஏற்பாடு செய்யப்பட்டதின் அடிப்படையில் செட்டில்மென்ட் ஆவணம் செய்து கொடுத்துள்ளாரா என்றால் ஆமாம். மேற்படி செட்டில்மென்ட் ஆவணத்தில் 1108 சதுரடி–ஐ நாங்கள் பேசியவாறு ஜோதிமணி அவரது மனைவிக்கு கொடுத்தார் என்றால் 1108 சதுரடியை நாங்கள் குடும்ப ஏற்பாட்டில் குறிப்பிடவில்லை. எனது தகப்பனார் பெயரிலுள்ள பிரிப்படாத 1ஆம் இன சொத்தில் 1108 சதுரடியை பொறுத்து இலவச நத்தம் பட்டா கொடுத்துள்ளார்கள், அதனடிப்படையில் மேற்படி 1108 சதுரடியை மற்ற பாகஸ்தர்களுக்கு தெரியாமல் ஜோதிமணி செட்டில்மென்ட் எழுதிக்கொடுத்துள்ளார்.

5) இந்த வழக்கில் நான் 2, 4, 5 பிரதிவாதிகளுக்கு சேர்த்து நான் எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். இந்த வழக்கில் ஜோதிமணி தரப்பினராக இருந்தும் நீதிமன்றத்திற்கு தெரியாமல் தனது மனைவிக்கு செட்டில்மென்ட் ஆவணம் எழுதிக்கொடுத்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி செட்டில்மென்ட் ஆவணம் எழுதிவைத்த விவரம் வில்லங்க சான்று பார்த்தபிறகுதான் எனக்கு தெரியும் என்றால் சரிதான். மேற்படி வில்லங்க சான்றில் எந்த வருடம் செட்டில்மென்ட் ஆவணம் எழுதப்பட்டது என்று தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன் தேதி ஞாபகம் இல்லை. மேற்படி விவரத்தை தெரிந்து கொண்டு எனது தம்பியான 2ஆம் பிரதிவாதியிடம் கேட்டேனா என்றால் எனது தம்பி மதுரைக்கு சென்றுவிட்டதால் நான் கேட்கவில்லை.

வாதிதரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.

S.d/ Ramadoss

Taken down by me in the open court read over to the witness and admitted by him to be correct.

PANCHANATHAN RAMESH

Digitally signed by PANCHANATHAN RAMESH
Date: 2026.03.05 11:59:08 +0530

DISTRICT MUNSIF, THIRUVAIYARU